# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மார்ச் 23, 2019 Weekly E-paper • March 23, 2019




## கொங்கு சமுதாயம்

-கார்த்திகேய சிவசேனாபதி

தலையங்கம்


## ‘பெருமை’ எடப்பாடி...!



## சாமியார்கள்!

மா.உதயகுமார்





# பொங்கி எழும் தேசபக்தாள்

-சுப.வீரபாண்டியன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மார்ச் 23, 2019 Weekly E-paper ● March 23, 2019

# பொங்கி எழும் தேசபக்தாள்

தேர்தல் நெருங்க நெருங்க, இன்னும் எத்தனை எத்தனை "துல்லியத் தாக்குதலை" நாடு எதிர்கொள்ளப் போகிறதோ தெரியவில்லை.


நேற்று மோடி அரசு நடத்தியுள்ள துல்லியத் தாக்குதல், ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் (JKLF) மீதானது! தீவிரவாத அமைப்பைத் தடை செய்து விட்டோம் என்கிறார்கள். ஆனால் அவர்கள் தீவிரவாதத்தைக் கைவிட்டு, 25 ஆண்டுகள் ஆகிவிட்டன.

அந்த அமைப்பு 1977 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுத்த ஒரு தீவிரவாத அமைப்புதான் அது. முதல் 10 ஆண்டுகள் இந்தியாவிற்கு வெளியில் மட்டுமே அந்த அமைப்பு இயங்கியது. 1987இல்தான் இந்தியாவில் தன் கிளையைத் தொடங்கியது. அதன்பின் 7 ஆண்டுகள் கடுமையான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

1994 ஆம் ஆண்டு தன் சிந்தனைப் போக்கை அது மாற்றிக் கொண்டது. ஜனநாயக முறையில் இயக்கத்தைக் கொண்டு செல்ல முடிவு செய்தது. யாசின் மாலிக் எடுத்த இம்முடிவை அமானுல்லா கான் ஏற்றுக்கொள்ளவில்லை. மாலிக் தலைமையிலான அணி ஜனநாயக வழிக்குத் திரும்பியது. அமானுல்லா கான் தலைமையிலான அணி ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்தது.

1999 இல் வாஜ்பாய் அரசு இருந்தபோது, யாசின் மாலிக் தீவிரவாத அமைப்புகளுடன்





● சுப. வீரபாண்டியன்

இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த உதவினார். இதனைக் குறிப்பிட்டு வாஜ்பாய் அவரைப் பாராட்டினார்.

பிறகு 2004 ஜனவரி 21 அன்று, இந்த மண்ணைவிட்டு வெளியேற்றப்பட்ட பண்டிட் குடும்பங்கள் மீண்டும் நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்றும், அவர்களுக்கும் இந்த மண்ணில் உரிமை உள்ளது என்றும், அனைவரும் சகோதரர்களாய்ச் சேர்ந்து வாழ்வோம் என்றும் மாலிக் வேண்டுகோள் விடுத்தார். முதலில் அந்த அமைப்பிற்குள் அதற்கு எதிர்ப்பு இருந்தாலும், பிறகு அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். அதன் விளைவாக, 2005 இல் பிரிந்திருந்த இரு அணியினரும் ஒன்று கூடினர். ஜனநாயகப் பாதையில் உரிமைகளுக்காகப் போராடுவது என்று முடிவெடுத்தனர்.

இப்போது மோடி அரசு ஜேகேஎல்எப் அமைப்பு ஒரு தீவிரவாத அமைப்பு என்று கூறித் தடை செய்துள்ளது. நாட்டின் பாதுகாவலர்கள் இல்லையா...... எங்காவது ஒரு தீவிரவாதத்தைக் காட்டி அதனைத் தடைசெய்து, தங்களின் தேசபக்தியைத் தேர்தலுக்குள் நாட்டிற்கு உணர்த்தியாக வேண்டியுள்ளது போலும்!

இந்த மக்களின் காவலர்களை - அதுதான் அந்த சவுக்கிதார்களை - இன்னும் இரண்டு மாதங்களுக்கு நாம்- பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்! ●

ஏப்ரல் 18




திமுக கூட்டணிக்கட்சிகளுக்கு வாக்களிப்பீர்



# கொங்கு வேளாளர் சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்தவர் கலைஞர்

● கார்த்திகேய சிவசேனாபதி



1975ல் முதல்வர் கலைஞரின் அறிவிப்புதான் இருண்டு கிடந்த கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கு விடிவெள்ளி ஆனது. அனைத்து உட்பிரிவுகளையும் உள்ளடங்கிய கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து தெளிவான அரசாணையாக 16.05.1975 அன்று 371 / 16.05.1975) கலைஞரின் தமிழக அரசு வெளியிட்டது.

அதன் பிறகுதான் கொங்கு வெள்ளாளர் இனத்தவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகள், மருத்துவம், பொறியியல் போன்ற கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு கிடைக்க ஆரம்பித்தது. கொங்கு வேளாளர் சமுதாயம் புதிய அத்தியாயம் காணத் தொடங்கியது. ஒரு சமுதாயம் அடுத்த நிலைக்கு முன்னேறி இருக்கிறது. துரதிர்ஷடவசமாக இந்தப் பகுதி மக்கள் வாக்களிக்காமல்தான் கலைஞர் தொடர்ந்து ஆட்சியைப் பறிகொடுத்தார் என்பதுவும் மிகவும் வருத்தத்திற்குரியது.

கொங்கு வேளாளர் மட்டுமல்ல, தமிழகத்தின் பிற சாதி மக்களுக்கும் இட ஒதுக்கீட்டில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்தவர் கலைஞர். ஒரு மாநில வளர்ச்சிக்கு சமூகநீதி எவ்வளவு முக்கியமானது என்பதை 60-70 களிலேயே உணர்ந்து செயல்பட்டவர் கலைஞர்

1) கொங்குப் பகுதியில் வேளாண்மையைச் செழிக்கச் செய்ய பரம்பிக்குளம்-ஆழியாறு, வட்டமலைக் கரை, நல்லதங்காள் ஓடை திட்டங்களின் விரிவாக்கங்களை கலைஞர் நிறைவேற்றினார்

2) 1967 76 ஆட்சியின் காலக்கட்டத்தில் கொங்கு மண்டலத்தில், கோவையில் ஒரு சில பெரிய தனியார் தொழில் நிறுவனங்கள் மட்டுமே உண்டு.

பின்னலாடையினால் திருப்பூர் தொழில் நகரமானது பின்னாளில் தான்.

ஒட்டு மொத்த கொங்கு மண்டலமே விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்தது. முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லை. சென்னைக்கோ, வெளி மாநிலங்களுக்கோ செல்ல வேண்டிய நிலைதான்.

கொங்குப் பகுதியில் அதிக மக்கள் தொகை கொண்ட கவுண்டர்கள் முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்தனர்.

1955 ஆம் ஆண்டு திரு. காகா கலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முதல் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு கமிசன் அறிக்கையில் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் வகுப்பினர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரை செய்திருந்தது.

தமிழ்நாட்டில் மூன்று பெரிய சமுதாயமான கொங்கு வேளாளர், வன்னியர், முக்குலத்தோர் ஆகியோர் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் சமுதாயத்தினர்.

அதில் வன்னியர், முக்குலத்தோர் வகுப்பினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தனர். கொங்கு வேளாளரை மட்டும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவில்லை.

அதனை தொடர்ந்து 1970 ஆம் ஆண்டு வெள்ளக்கோவில் சட்டமன்ற உறுப்பினரான மிசா சாமிநாதன், தன்னுடன் பலரையும் சேர்ந்துக் கொண்டு அந்தக் கோரிக்கையை முன் வைக்கிறார்.

1975ஆம் ஆண்டு கலைஞர், கொங்கு வெள்ளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது சமுதாய வரலாற்றில் யாரும் மறக்க முடியாத நிகழ்வாகும்.

3) தேர்வாணையக் குழுவில் (TNPSC) தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் பதவி இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் மிகப் பெரிய சமுதாயமான கொங்கு வெள்ளாளருக்கு 1929 ஆம் வருடத்தில் இருந்து 1974 ஆம் வருடம் வரை ஒரு முறை கூட ஒரு உறுப்பினர் பதவி தரப்படவில்லை.

அந்த கோரிக்கைக்காக முதல்வர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். அன்றைய முதல்வர் கலைஞர் அக்கோரிக்கையை மனமார ஏற்றுக் கொண்டார்.

அதன்படி தமிழ்நாடு தேர்வாணையக் குழு உறுப்பினராக கொங்கு வேளாள சமுதாயத்தைச் சேர்ந்த திரு ஏ. பழனிசாமி அவர்களைக் கலைஞர் அரசு நியமித்தது. அவர் 26 .06 .1974 அன்று அப்பதவியை ஏற்றுக் கொண்டார். கொங்கு வெள்ளாளர் சமுதாயத்தின் 44 ஆண்டுகால கனவு நினைவாகியது. அதன் பிறகுதான் குரூப்-1 தேர்வில் அச்சமுதாயத்தினர் தேர்வாகத் தொடங்கினார்கள். ●

(தோழர் சிற்பி செல்வராஜ் முகநூலில் பதிவு)

கருஞ்சட்டைப் பதிப்பகம்
இணையத்தள விற்பனை (online sales)
கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## கண்டன ஆர்பாட்டம்



திருக்குறளை இழிவு செய்து எழுதிய முன்னாள் தொல்லியல் துறை இயக்குனர் நாகசாமியை, செம்மொழி விருதுகள் தேர்வுக்குழு உறுப்பினாராக நியமித்ததைக் கண்டித்துப் பேரவை சார்பில், சுபவீ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை, வள்ளுர் கோட்டம் அருகில் 9.3.19 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை, திமுக மாவட்டச் செயலாளர் அன்பழகன் தொடக்கி வைத்தார்.

## சைதை தேர்தல் பொதுக்கூட்டம்



நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையாக 20.03.2019 அன்று தென் சென்னை வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து, சைதை, தேரடித் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சுப.வீரபாண்டியன், மா.சுப்ரமணியம், மனுஷ்ய புத்திரன் உள்ளிட்டோர் பேசினர்.

## சந்திப்பு



இன்று (21 - 3 - 2019) திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், பொருளாளர் தோழர் எழில்.இளங்கோவன் ஆகியோரைப், பேரவைத் தலைமை அலுவலகத்தில், தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகை. திருவள்ளுவன், தோழர் தமிழ் முருகன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். அப்போது கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குநர் தோழர் பெல் ராஜன் உடன் இருந்தார்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘பெருமை’ பேசும் எடப்பாடி!

தான் முதல்வராக இருப்பதால் சேலம் மாவட்டத்திற்குப் பெருமை என்று தம்பட்டம் அடித்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

உண்மைதான்! இல்லையென மறுக்கவில்லை.

சேலம் எட்டுவழிச்சாலை அமைக்கப் போகிறோம் என்று கிளம்பிவிட்ட பாஜகவிற்குக் காவடி தூக்கியது பெருமைதான்.

எட்டுவழிச்சாலை என்ற பெயரால் மரங்கள் வெட்டப்பட்டன. விவசாயிகளின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. இந்தப் பெருமையெல்லாம் எடப்பாடியைச் சேரும்.

நான் உயிரைக் கொடுத்தாவது நாட்டைக்காப்பேன் என்று மோடி சொன்னாராம். புளகாகிதப்பட்டுப் போன எடப்பாடி, மோடியைப் பிரதமர் ஆக்கவேண்டும் என்கிறார்.

நாட்டை அதிரவைத்துக் கொண்டிருக்கிறது ரஃபேல் விமான பேர ஊழல்.

அது குறித்த நீதிமன்ற விசாரணையின் போது ரஃபேல் விமான முக்கிய ஆவணங்கள் காணாமல் போய்விட்டன என்று மத்திய அரசு சொல்லியதே...

இப்படித்தான் நாட்டையும் இனி காப்பாற்றுவாரா மோடி.

இந்திய விமானப்படை விமானி அபிநந்தனை பத்திரமாகப் பாகிஸ்தானிடமிருந்து மீட்டாராம் மோடி. வாய்கூசாமல் இப்படிச் சொல்கிறார் எடப்பாடி.

அபிநந்தனை வைத்துப், போர் மேகத்தை உருவாக்கி, இந்திய நாடளுமன்றத் தேர்தலைத் தள்ளிப்போட நினைத்த மத்திய அரசுக்குப் பட்டை நாமத்தைச் சாற்றியதோடு, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தானே முன்வந்து அபிநந்தனை விடுதலை செய்தார் என்பது உலகறிந்த செய்தி.

இது கூடத்தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறார் எடப்பாடி.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தில் 13 பேர்கள் சுட்டுக்கொலை...

நீட் மருத்துவத் தேர்வுக்கு மறைமுக ஆதரவு...

ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று ஒரே இரவில் அறிவித்து, மாதக் கணக்காக வங்கியின் வாசல்களிலும், ஏ.டி.எம் இயந்திரங்களின் முன்னாலும் நிற்கவைத்து...

- இப்படி மாறி மாறி நாட்டைச் சீர்கெடுத்த பெருமை மோடிக்கும், எடப்பாடி பழனிசாமிக்கும் தான் சேரும்.

இப்படிபட்ட பெருமைகளுக்காக இவர்களை ஆட்சியிலிருந்து வீட்டிற்கு அனுப்புவதே இனி மக்களுக்குச் சேரும் பெருமையாக இருக்கும்.


**வாக்களியுங்கள்**



**திமுக கூட்டணிச் சின்னங்களுக்கு**

# வீடுபேறு அடையும் சாமியார்கள்!

● மா.உதயகுமார்



மக்களவைத் தேர்தல் வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு, தேர்தல் அறிக்கைகள் வெளியீடு என அரசியல் கட்சிகளைப் பின் தொடர்ந்து செய்திகள் ஒரு புறம் வந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு புறம் மசூத் அசாரை சர்வதேசப் பயங்கரவாதியாக அறிவிக்க சீனா எதிர்ப்பு தெரிவித்தது பேசுபொருளாக வலம் வருகின்றது. இவ்வேளையில் சத்தம் இல்லாமலும் அதிக கவனம் பெறாமலும் ஒரு நிகழ்வு நடந்து முடிந்திருக்கிறது.

சமஜவுதா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு வழக்கில் சாமியார் அசீமானந்தும் அதில் தொடர்புடைய மற்ற மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 2007 பிப்ரவரியில் ஹரியானா மாநிலம் பானிபட் அருகே இந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது. இதில் 68 பேர் உயிரிழந்தனர். அதில் 44 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கை விசாரித்த தேசிய புலனாய்வு முகமை (NIA - National Investigation Agency) 2011 இல் சாமியார் அசீமானந்தையும் அவரது கூட்டாளிகளையும் குற்றவாளிகளாக அறிவித்தது.

இதில் அசீமானந்த் முக்கியக் குற்றாவாளியாக அறிவிக்கப்பட்டார். சாமியார் அசீமானந்த் யாராக இருக்க முடியும்? அய்யத்திற்கு இடமின்றி அவர் RSS அய்ச் சேர்ந்தவர்தான். சிறையில் தன்னைப் பேட்டி காண வந்த பெண் பத்திரிக்கையாளரிடம் "எங்கள் சங்கத்தில்(RSS) நீங்கள் இருந்திருக்கிறீர்களா?" என்று கேள்வியைக் கேட்டுவிட்டு பேட்டி கொடுத்தவர்தான் அசீமானந்த். இன்று அவர் முன்னாள் RSS உறுப்பினர்.

இந்த அசீமானந்த் முதலில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பின்னர் 2014இல் அவர்கள் ஆட்சி வந்ததும் 2015 ஆம் ஆண்டில் ஒப்புதல் வாக்குமூலங்கள் தன்னை மிரட்டிப் பெறப்பட்டவை என்று (ஏ)மாற்றினார். சாட்சிகள் காட்சிகளை மாற்றினர். நீதிமன்றம் விடுவித்தது. சாமியார் சத்தமில்லாமல் வீடு அடைந்தார். வீடுபேறு அடைவது என்றால் என்ன என்பது இப்போது விளங்குகிறது.

பாதிக்கப்பட்ட பலர் வழக்கு தொடுத்திருந்தனர். என்ன செய்வது? அசீமானந்த் காவியல்லவா உடுத்தியிருக்கிறார். காவல் துறை காவித் துறையை என்ன செய்ய முடியும்?

மிகவும் எளிமையாக ஒரு செயலைச் செய்து முடிக்கும் தன்மையை ஆங்கிலத்தில் "Cake Walk" என்று சொல்வார்கள். எந்த ஒரு குற்றத்திலும் இருந்து விடுதலையாவது என்பது அவர்களுக்கு "Cake Walk" போன்றது. 2007 மே மாதம் அய்தராபாத்தில் நடந்த மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் இருந்தும், 2007 அக்டோபர் மாதம் நடந்த அஜ்மர் குண்டு வெடிப்பில் இருந்தும் அசீமானந்த் விடுவிக்கப்பட்டார். அவருக்கு விடுதலை வழங்கிய நீதிபதி K.இரவீந்தர் ரெட்டி அதற்குப் பின் பா.ஜ.க வில் இணைந்தார். பா.ஜ.க வில் இணைவதற்கான தகுதி என்ன என்று புரிகிறது.

எத்தனை குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினாலும் காவித் தீவிரவாதிகள் இங்கு உற்சாகமாக உலவிக்கொண்டிருப்பார்கள். ஆனால் எல்லையில் தீவிரவாதிகள் தாக்குதல் என்று மக்களை உசுப்பேற்றுவார்கள்.

பா.ஜ.க வெற்றி பெற இப்போது யாகம் நடத்தியிருக்கிறார்கள். இந்த யாகத்தில் எத்தனை அப்பாவி மக்களின் உயிர் பலியிடப்பட்டிருக்கிறது என்பதை மக்கள் உணரவேண்டும்.

இவர்கள் ஆட்சியில் தொடர்ந்தால் பார்ப்பனர் அல்லாத மக்களின் வாழ்க்கையைக் குடைவார்கள். இன்னும் பல சாமியார்கள் வீடுபேறு அடைவார்கள்.

எனவே மீண்டும் இந்த நாடு காவித் தீவிரவாதிகளின் கைகளுக்குள் சிக்கிக்கொள்ளக் கூடாது.அதற்கு நம் கைகளில் இருக்கும் ஒரே ஆயுதம் நம்முடைய வாக்குச் சீட்டு. காவியைத் துரத்த வரவேண்டும் கருப்பும் சிவப்பும்! ●

ஏப்ரல் 18



வாக்களியுங்கள்
உதயசூரியனுக்கு!

